2013 அக்டோபர் 28]

பணி முடிவடையாததால், அந்தப் பகுதியிலே, மிகக் கடுமையான போக்குவரத்து நெருக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, மழைக்காலத்தில் அந்தப் பாலம் வழியாகக் கடந்து செல்ல முடியவில்லை. வட சென்னையில் ஒரு பகுதியும், பெரம்பூர் பகுதியும் துண்டிக்கப்படுகிற ஒரு நிலைமை ஏற்படுகிறது. ஆனால், கடந்த சில மாதங்களாக, அந்தப் பால வேலை முழுமையாக நின்றுபோய் இருக்கிறது. ஆகவே, அடுத்த சில மாதங்களுக்குள்ளாக அந்தப் பாலப் பணியை நிறைவு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப் பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிலம் கையகப்படுத்தும் பிரச்சினை மற்றும் கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணியில் இப்பாலம் கட்டும் பணிகள் தாமதமடைந்திருக்கின்றன. இதை விரைந்து முடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

36—

காற்று மாசு

***36185—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, புழுதிவாக்கம் கிராமம், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரி கொண்டு செல்லும்பொழுது ஏற்படும் காற்று மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சட்டமன்றத் தொகுதி, பொன்னேரி தாலுகா, புழுதிவாக்கம் கிராமம் சர்வே எண் 143-ல் தி/ள். செட்டிநாடு இன்டர்நேஷனல் கோல் டெர்மினல் என்ற தனியார் நிறுவனம் ஆண்டுக்கு 8 மில்லியன் டன் நிலக்கரியைக் கையாளுதல், சேமித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டுவருகின்றது. சேமிப்புக் கிடங்கிலிருந்து லாரிகள்மூலம் நிலக்கரியை ஏற்றிக்கொண்டு செல்லும்போது காற்று மாசினைத் தடுக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பின்வரும் சில நிபந்தனைகளை விதித்துள்ளது: (1) அளவிற்கதிகமான லோடுகளை ஏற்றிச் செல்லக்கூடாது, (2) தார்பாலின் கொண்டு மூடப்பட்டு, கரித்துகள்கள் காற்றில் பறக்காத வண்ணம் கொண்டு செல்ல வேண்டும், (3) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இந்நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்துவரும். நிபந்தனைகளை நிறுவனம் மீறும்பட்சத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.

திரு. பொன். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். எனது பொன்னேரி தொகுதிக்குட்பட்ட புழுதிவாக்கம் கிராமத்தில், செட்டிநாடு நிறுவனத்தின் நிலக்கரி சேமிப்புக் கிடங்கிலிருந்து ஒரு நாளைக்கு சராசரியாக 950 லாரிகளில் நிலக்கரியை எடுத்துச் செல்கிறார்கள். ஒரு லாரியிலே எடுத்துச் செல்லவேண்டிய நிலக்கரியின் அளவு 16 டன்னிலிருந்து 17 டன்தான் இருக்கவேண்டும். ஆனால், இந்த லாரிகளிலே ஓவர் லோடாக 25 முதல் 30 டன்கள் ஏற்றிச் செல்கிறார்கள். அதேபோன்று தார்ப்பாய் கட்டாமல் லாரிகள் செல்வதால் வழியிலே இருக்கும் அந்தச்

2013 அக்டோபர் 28]

சாலை ஓரங்களிலே நிலக்கரி அதிகமாக சிந்திவிடுகிறது. இதன்காரணமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்குச் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுகின்றது. இருப்பினும், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்று வழியும் உண்டு. தற்போது எடுத்துச் செல்கின்ற அத்திப்பட்டு, வல்லூர், மீஞ்சூர் பேரூராட்சி, நாலூர் ஊராட்சி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. பொன். ராஜா: மேட்டுப்பாளையம் மற்றும் பொன்னேரி பேரூராட்சி வழியாக எடுத்துச் செல்லும்போது லாரிகளிலேயிருந்து அதிக அளவிலே நிலக்கரி கொட்டுவதால் அவற்றை மாற்று வழியில் கொண்டு செல்ல ஏற்பாடு செய்யும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளில் நிலக்கரியை அதிக லோடுகள், அதாவது 17 டன்களுக்குப் பதிலாக 30 டன்கள் எடுத்துச் செல்வதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், மாற்று வழிப் பாதையில் எடுத்துச் சென்றால் இந்தப் பாதிப்பு இருக்காது என்றும் குறிப்பிட்டார்கள். அதில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆய்வுகளை மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, காற்றில் மாசு கட்டுப்படுத்துகின்ற கருவி ஒன்று நிறுவப்பட்டு, Care Air Centre மூலமாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 8 மில்லியன் டன் இறக்குவதனால், அதிகப்படியான லோடுகள் செல்வதனால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை

மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.*

திரு. பொன். ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாற்று வழியாக அத்திப்பட்டு, வல்லூர், நாப்பாளையம், மணலி, மணலி புறவழிச் சாலை, 200 அடி சாலையில், அதாவது அவுட்டர் ரிங் ரோடு சாலை வழியாக என்.எச்.-5 இலே சென்று கும்மிடிப்பூண்டி, ஆந்திரா மாநிலங்களுக்குக் கொண்டு சென்றால், இந்தச் சிரமத்தைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற, ஆந்திரா மாநிலத்திற்குக் கொண்டு செல்கின்ற அந்த மாற்று வழியினை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

37—

தடுப்பணை

***19761—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—